# 10

# குடும்பச் சட்டத்தில் சொத்து எவ்வாறு பிரிக்கப்படுகிறது

TML 010

ஒன்ராறியோவில் பெண்களுக்குரிய குடும்பச் சட்டம்



எல்லோரும் பெண்கள்.
ஒரே குடும்பச் சட்டம்.
அறியுங்கள் உங்கள் உரிமைகளை.

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

# குடும்பச் சட்டத்தில் சொத்து எவ்வாறு பிரிக்கப்படுகிறது

*இந்த சிறுநூல் சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அடிப்படையான ஒரு விளக்கத்தை உங்களுக்குத் தரும் நோக்கத்துடன் வரையப்பட்டு உள்ளது. தனிப்பட்ட முறையிலான சட்ட ஆலோசனை மற்றும் உதவி என்பவற்றுக்கு இணையான ஒரு மாற்றீடாக இதனைக் கருத முடியாது. குடும்பச் சட்டம் தொடர்பிலான பிரச்சினைகளை நீங்கள் எதிர்கொள்ளும் பொழுது உங்கள் உரிமைகளைக் காப்பதற்காக, உங்களால் முடிந்த அளவு விரைவாக சட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள். குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைக் கண்டுபிடித்து அவருக்குக் கட்டணமாக பணம் செலுத்துவது எப்படி என்பது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற எமது இணையத் தளத்தில் காணப்படும் "குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல்" என்ற சிறுநூலைப் படியுங்கள்.*

நீங்களும் உங்கள் துணைவரும் வேறாகப் பிரியும் பொழுது உங்கள் சொத்தினைப் பிரிக்க வேண்டிய நிலை ஏற்படும். **சொத்து** என்பது நீங்கள் உங்களுக்கு உரிமையானது என்று வைத்திருக்கும் எதனையும் குறிக்கும். வீடுகள், மோட்டார் கார் வாகனங்கள், சொந்தப் பாவனை மற்றும் வீட்டுப்பாவனைப் பொருட்கள், ஓய்வூதியங்கள், வங்கிக் கணக்குகள் மற்றும் பிற முதலீடுகள் போன்றவை இதில் அடங்கும். சொத்து என்பதில் உங்கள் கடன்களும் அடங்கும்.

சட்டரீதியாகத் திருமணம் செய்தவர்களுக்கும் பொதுச்சட்டத்தின் கீழ் சேர்ந்து வாழ்பவர்களுக்கும் இடையே சொத்து உரிமைகளில் முற்றுமுழுதான வேறுபாடு உண்டு. நீங்கள் பொதுச்சட்டத்தின் கீழ் வாழ்ந்து வந்தால் திருமணம் செய்த பெண்களுக்கு இருப்பவை போன்ற சொத்து உரிமைகள் உங்களுக்கு இருக்காது.

நீங்கள் சட்ட ரீதியாகத் திருமணம் செய்து இருந்தால், குடும்பச் சொத்தின் பெறுமதியை எப்படித் தீர்மானிப்பது என்றும் அச்சொத்தினை எப்படிப் பிரிப்பது என்றும் விளக்கும் விதிகள் சட்டத்தில் உண்டு. சட்டத்தின் கண்களில் திருமணம் என்பது ஒரு பொருளாதார ரீதியான பங்குடைமை (economic partnership) போலப் பார்க்கப்படுகிறது. உங்கள் திருமணம் அறுந்து போகுமானால் உங்கள் திருமண வாழ்க்கைக் காலத்தின் பொழுது வந்து சேர்ந்த குடும்பச் சொத்துடைமைகளும் கடன்களும், அதாவது நிகரக் குடும்பச் சொத்து (net family property), சம அளவாகப் பிரிக்கப்படல் வேண்டும். எனினும், நீங்களும் உங்கள் துணைவரும் சட்டரீதியாகத் திருமணம் செய்து இருக்காவிட்டால், நீங்கள் இருவரும் பிரியும் பொழுது இதே உரிமை உங்களுக்குத் தானாகவே வந்து சேரமாட்டாது.

## திருமணம் செய்த சோடிகளுக்கு எப்படிச் சொத்து பிரிக்கப்படுகிறது

திருமண உறவில் உள்ள ஒவ்வொரு வாழ்க்கைத் துணையாளும் தம் இருவருக்கும் இடையிலான உறவுக்குப் பொருளாதார முறையிலும் வேறு வழிகளிலும் சம அளவில் பங்களித்தனர் என்று சட்டம் கருதிக் கொள்கிறது. உங்கள் திருமணம் முறியும் பொழுது உங்களிடம் நிகரமாக இருக்கும் குடும்பச் சொத்தினை சம அளவில் நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையாளும் பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்பதே பொதுவான விதிமுறை ஆகும். யார் அதற்குப் பணம் கொடுத்தார் என்றாலும் யாரின் பெயரில் அது பதியப்பட்டுள்ளது என்றாலும் இவ்விதிமுறையே பின்பற்றப்படுகிறது. குடும்பச் சொத்தினைப் பங்கிடுவது என்றால் நீங்கள் குடும்பத்தின் சொத்துடைமைகள் மற்றும் கடன்கள் என்ற இரண்டின் பெறுமதியையும் பங்கிடுகிறீர்கள் என்று அர்த்தமாகும்.

**சொத்தினைப் பிரிப்பதற்கான செயல்முறை எப்படி அமையும்?**

குடும்பச் சொத்தின் பெறுமானத்தைத் தீர்மானித்து அதனைப் பிரிக்கும் செயல்முறையை **சமன்படுத்தல்** (equalization) என்று அழைப்பர். சமன்படுத்தல் செயல்முறையில் இரண்டு படிமுறைகள் உள்ளன.

*படிமுறை 1: நிகரக் குடும்பச் சொத்தினைக் கணித்தல்*

இச்செயல்முறையில் முதலாவதாகச் செய்வது என்னவெனில், உங்களில் ஒவ்வொருவரும் உங்கள் **நிகரக் குடும்பச் சொத்தின்** (net family property) பெறுமதியைக் கணிக்க வேண்டும்.

இதனைச் செய்வதற்கு, உங்களில் ஒவ்வொருவரும் நீங்கள் பிரிந்த பொழுது உங்களுக்குத் தனித்தனியாக இருந்த சொத்துடைமைகளின் (assets) பெறுமதியை முதலில் பட்டியலிட்டு அவற்றின் பெறுமதியை ஒன்றுசேர்த்துக் கூட்டவேண்டும். இவற்றைக் கூட்டி வரும் தொகையில் இருந்து பின்வருவனவற்றின் பெறுமதியைக் கழியுங்கள்:

- பிரியும் தருணத்தில் செலுத்த வேண்டி இருந்த கடன்கள்
- திருமணத்தின் பொழுது நீங்கள் கொண்டுவந்த சொத்தின் பெறுமதி
- உங்களுக்குத் தரப்பட்ட பரிசுகள்
- உங்களுக்குப் பரம்பரை வழியாக வந்துசேர்ந்த சொத்து
- சொந்த உடற்காயங்களுக்காக நீங்கள் பெற்ற நஷ்டஈடு

இவற்றில் ஏதாவது ஒன்று உங்கள் குடும்ப வீட்டினை வாங்க உபயோகிக்கப்பட்டது என்றால், அதனை நீங்கள் உங்கள் நிகரக் குடும்பச் சொத்தில் இருந்து கழிக்க முடியாது. இதற்குக் காரணம் திருமணமான ஒரு சோடியின் மற்றைய எல்லாச் சொத்துடைமைகளில் இருந்தும் அவர்களின் குடும்பவீடு வேறுபட்ட ஒரு முறையில் கருதப்படுகிறது.

குடும்பவீடு அல்லது **மணவாழ்க்கை வீடு** (matrimonial home) என்பதுஇ நீங்கள் பிரிந்து கொண்ட காலத்தில் பெரும்பகுதி நாட்களில் உங்களின் குடும்பம் வாழ்ந்த வீடு ஆகும். இந்த வீடு உங்களுக்குச் சொந்தமானதாக இருக்கும் என்றால் உங்களில் ஒவ்வொருவரும் அந்த வீட்டின் தேறிய பெறுமானத்தில் பங்கு கொள்ளும் உரிமை பெற்று இருக்கிறீர்கள். உங்களில் யாருடைய பெயர் வீட்டின் உறுதியில் இருந்தாலும், உங்கள் திருமணத்துக்கு முன்பாக உங்களில் ஒருவர் அதற்கு உரிமையாளராக இருந்திருப்பினும், இவ்வாறு தான் கருதப்படும். உங்கள் திருமணத்தின் பொழுது உங்களில் ஒருவருக்குக் கிடைத்த நன்கொடைகளைக் கொண்டு அந்த வீடு வாங்கப்பட்டு இருந்தாலும் உண்மை நிலை அதுவாகவே இருக்கும். எனினும் சமன்படுத்தல் செயல்முறைக்கு வெளியே உங்கள் வீடு வைக்கப்படும் என்று சொல்லும் ஒப்பந்தம் (திருமண உடன்படிக்கை) ஒன்றில் நீங்களும் உங்கள் துணைவரும் கையொப்பம் இட்டு இருந்தால், அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் மட்டுமே, உங்கள் வீட்டின் பெறுமதி பங்கிடப்பட மாட்டாது.

சில சொத்துக்களின் பெறுமதி காலப் போக்கில் மாற்றம் அடையக் கூடும். நிகர குடும்பச் சொத்தினைக் கணிக்க முற்படும் பொழுது இது பிரச்சினைகளை உண்டாக்கலாம். இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு **பெறுமதி கணிக்கும் திகதி** (valuation date) என எந்த நாளைப் பயன்படுத்த வேண்டும் என்று சட்டம் சில வரையறைகளைத் தருகிறது. வழக்கமாக இத்திகதி நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையாளும் பிரிந்து இனிமேல் ஒன்றுசேர மாட்டீர்கள் என அறிந்து கொண்ட நாளாக இருக்கும்.

*படிமுறை 2: குடும்பச் சொத்தினைச் சம அளவில் பங்கிடுதல்*
உங்களில் ஒவ்வொருவரும் உங்கள் தனிப்பட்ட குடும்பச் சொத்தினைக் கணித்த பின்பு அப்பெறுமதி **சமன்படுத்தப்பட** (equalized) **வேண்டும்.** உங்களில் ஒவ்வொருவரும் மற்றவருக்கு உங்கள் தனிப்பட்ட நிகர குடும்பச் சொத்தின் பெறுமதியைக் கூற வேண்டும். யாருடைய நிகர குடும்பச் சொத்துப் பெறுமதி கூடுதலாக அமைகிறதோ, அவர் மற்றைய வாழ்க்கைத் துணையாளுக்கு இருவரின் தொகைகளுக்கும் உள்ள வித்தியாசத்தின் அரைப்பங்கினை செலுத்துதல் வேண்டும். இக்கொடுப்பனவு **சமன்படுத்தல் கொடுப்பனவு** (equalization payment) என்று அழைக்கப்படும்

சில சந்தர்ப்பங்களில், சமன்படுத்தல் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டது நியாயமற்ற ஒரு தொகையாக இருந்தால், நீதிமன்றம் வேறு ஒரு சமன்படுத்தல் கொடுப்பனவுக்கு உத்தரவிடக்கூடும். உதாரணமாக, நீங்கள் திருமணம் செய்த பொழுது உங்கள் வாழ்க்கைத் துணையாள் (spouse) தனக்கு ஏற்கனவே இருந்த பெரிய கடன்கள் பற்றி உங்களுக்குச் சொல்லி இருக்கவில்லை என்றால், அல்லது அவர் பாரிய கடனுக்குள் வேண்டுமென்றே இறங்கியிருந்தால், நீதிமன்றம் கூடிய தொகையினை உங்களுக்குச் செலுத்தும்படி கட்டளையிட முடியும்.

## பலதாரத் திருமணங்களில் வாழ்ந்து வரும் பெண்களுக்கு எவ்வகையான உரிமைகள் இருக்கின்றன?

பலதாரத் திருமணம் கனடாவில் சட்டரீதியாக அங்கீகரிக்கப் படுவதில்லை. பலதாரத் திருமணம் சட்டரீதியாக ஏற்கப்படும் நாடு ஒன்றில் நீங்கள் திருமணம் செய்து இருந்தால், குடும்பச் சொத்தில் சமன்படுத்தல் முறைக்கு விண்ணப்பிக்கின்ற உரிமை உட்பட உங்களுக்குக் குடும்பச் சட்டத்தின் கீழ் சில உரிமைகள் இருக்கலாம்.

## பொதுச் சட்டத்தின் கீழ் சேர்ந்து வாழும் சோடிகளின் சொத்து எவ்வாறு பிரிக்கப்படுகிறது

திருமணம் செய்யாமல் பொதுச்சட்டத்தின் கீழ் சேர்ந்து வாழும் முறையினைத் தெரிவு செய்வோருக்கு சொத்து உரிமைகள் மிகவும் வேறுபட்டனவாக உள்ளன. பொதுச்சட்ட உறவுகளைச் சட்டம் பல வழிகளில் அங்கீகரிக்கின்ற போதிலும், சொத்தினைப் பிரித்தல் பற்றிய சட்ட விதிமுறைகள் பொதுச்சட்டச் சோடிகளுக்கு உபயோகப்படுவது இல்லை. பொதுவாக உங்களில் ஒவ்வொருவரும் இந்த உறவினுக்குள் புகும்பொழுது நீங்கள் கொண்டுவந்த சொத்துக்கும், நீங்கள் ஒன்றாக இருந்த காலத்தில் தனித்தனியாக வாங்கியவற்றுக்கும் உரிமை கொண்டவர்களாக இருப்பீர்கள். இதனை விடக் கூடிய சிக்கலை தருவது என்னவென்றால், பொதுச்சட்ட வாழ்க்கைத் துணையாள் ஒருவருக்குச் சொந்தமான ஒரு சொத்தின் பெறுமதி அதிகரிக்க, அதனை எவ்வாறு கையாளுவது என்பதுதான்.

நீங்களும் உங்கள் துணைவரும் பொதுச்சட்ட உறவு ஒன்றின் கீழ் சேர்ந்து வாழ்ந்து இருந்தால் உங்கள் மணவாழ்க்கை வீட்டின் பெறுமதியில் அரைப்பங்குக்கான சம உரிமை உங்களுக்கு இருக்காது. நீங்கள் சோடியாக வாழ்ந்த வீடு உரிமைப் பத்திரத்தில் பெயர் குறிப்பிட்ட நபருக்கே சொந்தமாக இருக்கும்.

நீங்கள் பிரிய நேர்ந்தால் எவ்வாறு சொத்து மற்றும் கடன்களைக் கையாளுவீர்கள் என்பதை வரையறுக்கின்ற கூடிவாழும் ஒப்பந்தம் (cohabitation agreement) ஒன்றினை நீங்களும் உங்கள் பொதுச் சட்டத் துணைவரும் எழுத முடியும். உங்களிடம் கூடி வாழும் ஒப்பந்தம் ஒன்று இல்லை என்றால், அத்துடன் உங்கள் சொத்தினைப் பிரிப்பது எப்படி என்பதில் உங்களிடையே உடன்பாடு இல்லை என்றால், உங்களில் யாரோ ஒருவர் நீதிமன்றத்துக்குச் செல்ல முடியும். நீங்கள் ஒரு சோடியாகச் சேர்ந்து வாங்கியவற்றில் ஒரு பங்கினைக் கோரி, அல்லது உங்கள் உறவு நீடித்த காலத்தில் அச்சொத்தின் பெறுமதி அதிகரித்த தொகையில் ஒரு பங்கினை வேண்டி நீதிபதியிடம் நீங்கள் தீர்வு (award) கேட்கலாம்.

இந்த வகையான ஒரு தீர்வினை நீங்கள் பெற்றுக் கொள்வதற்கு, அச்சொத்தினைச் சேர்ப்பதில் அல்லது பேணிவைத்திருப்பதில் நீங்களும் பங்களித்தீர்கள் (contributed) என்று நிரூபிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். உதாரணமாக, உங்கள் துணைவரின் வீட்டுக்கு உரிய கட்டணங்களில் சிலவற்றுக்கு நீங்கள் பணம் செலுத்தினீர்கள் என்று, அல்லது உங்கள் இலவச உழைப்பினை வழங்கியதன் மூலம் நீங்கள் அவரது வியாபாரத்தின் பெறுமதியை அதிகரித்தீர்கள் என்று உங்களால் நிரூபிக்க முடிந்தால் உங்களுக்குச் சிறிதளவு பணம் வழங்கப்படலாம்.

*நீங்கள் பிரெஞ்சு மொழி பேசும் ஒரு பெண்ணாக ஒன்ராறியோவில் வாழ்ந்து வருகிறீர்கள் என்றால் குடும்பச் சட்ட நீதிமன்ற நடைமுறைகளின் பொழுது பிரெஞ்சு மொழியில் சேவைகளைப் பெறுகின்ற உரிமை உங்களுக்கு உண்டு. உங்கள் உரிமைகள் பற்றி நீங்கள் மேலதிக தகவல் பெறுவதற்கு ஒரு சட்டத்தரணி அல்லது ஒரு சமூக சட்ட உதவி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்: அல்லது பெமெயிட் (Femaide) என்று அழைக்கப்படும் ஆதாரத் தொலைபேசி இணைப்புடன் 1-877-336-2433 என்ற எண்ணிலும், செவிப்புலன் குறைந்தவர்கள் அதன் 1-866-860-7082 என்ற எண்ணிலும், தொடர்பு கொள்ளலாம். பிரெஞ்சு மொழியில் சேவைகள் பெறுவது எப்படி என்பது பற்றிய மேலதிக தகவலினை www.onefamilylaw.ca அல்லது www.undroitdefamille.ca. என்ற எங்கள் இணையத்தளத்திலும் நீங்கள் பார்க்க முடியும்.*

## பெறக்கூடியதாக உள்ள குடும்பச் சட்ட விடயங்களின் தலைப்புகள்*

1. மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வும் குடும்பச் சட்டமும் (TML 001)
2. பிள்ளைப் பாதுகாப்பும் குடும்பச் சட்டமும் (TML 002)
3. பிள்ளை ஆதார உதவித் தொகை (TML 003)
4. குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம் (TML 004)
5. பிள்ளைக்கான கட்டுக்காப்பும் அணுகல் உரிமையும் (TML 005)
6. குடும்பச் சார்பு உடன்படிக்கைகள் (TML 006)
7. குடும்பச் சட்டச் சமரசம (TML 007)
8. குடிவரவாளர்களாக, அகதிகளாக, மற்றும் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாக உள்ள பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பச் சட்டப் பிரச்சினைகள் (TML 008)
9. குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல் (TML 009)
10. **குடும்பச் சட்டத்தில் சொத்து எவ்வாறு பிரிக்கப்படுகிறது (TML 010)**
11. திருமணமும் விவாகரத்தும் (TML 011)
12. வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை (TML 012)

* *இந்த சிறுநூல் பல வடிவங்களிலும் பல மொழிகளிலும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற இணையத் தளத்தைப் பாருங்கள். உங்கள் குடும்பச் சட்ட உரிமைகளை நீங்கள் புரிந்து கொள்வதற்கு உதவும் வகையில் இந்த இணையத் தளத்திலும் மேலதிக விடயங்களை நீங்கள் காண முடியும்.*

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

Funded by: / Financé par :
Ontario

இவ் வெளியீடுகளில் தெரிவிக்கப்பட்டு இருக்கும் கருத்துக்கள் பெண்களுக்கான குடும்பச் சட்டக் கல்வி (FLEW) அமைப்பின் கருத்துக்களேயன்றி அவை மாகாண அரசின் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றன எனக் கருத முடியாது.